# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com
www.bankubeutn.in


சுற்றறிக்கை எண்:141:2016 நாள்: 02.06.2016

அன்பார்ந்த தோழர்களே,

## வேண்டுகோள்

நமது வங்கியின் கோபாலபுரம் கிளையில் எழுத்தராகப் பணியாற்றிவரும் தோழர்.S.கணேசன் அவர்களின் மகன் திரு.மதன சுதீர் அவர்கள் கடந்த 31.03.2016 அன்று திருநெல்வேலி ரயில் நிலையத்தில் நடந்த விபத்தில் தனது வலது காலை இழந்துவிட்டார் என்ற தகவலை மிகவும் வருத்தத்துடன் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். இந்த இளம் வயதில் (22 வயது) திரு.மதன சுதீர் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு, அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது. மன அளவிலான பாதிப்பைத் தாண்டி, பொருளாதாரரீதியாகவும் மிகப்பெரிய தாக்கத்தை எற்படுத்தியுள்ளது.

திரு.மதன சுதீர் அவர்கள் கடந்த 2 மாதங்களாக திருவனந்தபுரத்திலுள்ள KIMS மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தோழர்.S.கணேசன் அவர்கள் இதுவரை ரூ.17,00,000/- மருத்துவ செலவு செய்துள்ளார். செயற்கைக் காலைப் பொருத்துவதற்கு மேலும் ரூ.5,50,000/- செலவாகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. வங்கி இதுவரை ரூ.6,00,000/- மட்டுமே வழங்கியுள்ளது. தோழர்.S.கணேசன் அவர்கள் தன்னால் இயன்ற அளவு பல இடங்களில் கடன் பெற்று மருத்துவ செலவுகளுக்கு பணம் செலுத்திவருகிறார்.

தோழர்.S.கணேசன் அவர்களுக்கு நமது சங்கத்திலிருந்து ரூ.10,000/- நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் மொத்த செலவை கணக்கிடும்போது, இது மிகச் சிறிய தொகையே. இக்கட்டான சூழலிலுள்ள தோழர்.S.கணேசன் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவேண்டிய கடமையும், பொறுப்பும் நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. நாம் வழங்கும் சிறிய தொகையும் இந்த சமயத்தில் பேருதவியாக இருக்கும். நமது தோழர்கள் அனைவரும் தங்களால் இயன்ற தொகையை வழங்கி தோழர்.S.கணேசன் அவர்களுக்கு உதவிட வேண்டுகிறோம்.

**பணம் செலுத்தவேண்டிய சங்கத்தின் கணக்கு எண்**

**332602070023694.**

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**